நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலக
807, அண்ணா சாலை, சென்னை-2

**சுற்றறிக்கை**

ந.க.எண்.13193 / 2017 / எல்ஏ1,

நாள். 21.02.2019.

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் மனைகள் வரன்முறை செய்தல் - அரசாணையின்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3))துறை, நாள்.05.02.2019.
2. அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3))துறை, நாள்.04.05.2017.
3. அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3))துறை, நாள்.13.10.2017.

-----

அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் மனைகள் வரன்முறை செய்தல் சம்பந்தமாகப் பிறப்பிக்கப்பட்ட, பார்வை 1-ல் சுட்டிய அரசாணை நகல் உரிய தொடர் நடவடிக்கைக்காக ஏற்கனவே மின்னஞ்சல் மூலம் தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும், அதன் நகல் மீண்டும் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திட்டத்தின் இறுதி நாளான 03.11.2018-ற்குள் இணையதளம் வாயிலாக விற்பனை செய்யப்பட்ட மனையையோ அல்லது விற்கப்படாத மனையையோ வரன்முறை செய்வதற்காக விண்ணப்பம் ஏதேனும் பெறப்பட்டிருந்தால் அது சம்பந்தப்பட்ட மனைப்பிரிவில் அமையும் எஞ்சிய மனைகளையும் பார்வை 1-ல் சுட்டிய அரசாணையின்படி வரன்முறை செய்துகொள்ளலாம். அவ்வாறான எஞ்சிய மனைகளை வரன்முறை செய்வதற்கான விண்ணப்பத்தை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றும், கூராய்வுக் கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூ.500/-ஐ திட்டக் குழுமம் / மண்டல அலுவலக வங்கிக் கணக்கில் மனுதாரரால் செலுத்தப்படும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட மனைப்பிரிவுக்கு Sold out plot frame work மற்றும் in-principle clearance வழங்கி அதனைத் தொடர்ந்து மனைவரன்முறை செய்வதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு அனுப்பும் நடவடிக்கை தொடருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சியானது பார்வை 1-ல் சுட்டிய அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மனுதாரரிடமிருந்து வரன்முறைக் கட்டணம் மற்றும் பார்வை 2 மற்றும் 3-ல் சுட்டிய அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வளர்ச்சிக் கட்டணமும் பெறப்பட்ட பின்னர் மேற்காண் மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு மட்டும் வரன்முறை ஆணை வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஒரு மனைப்பிரிவு சம்பந்தமாக திட்டத்தின் இறுதி நாளுக்குள் வரன்முறை செய்யக்கோரி இணையதளம் வாயிலாக விண்ணப்பம் ஏதும் பதிவு செய்யப்படாதபட்சத்தில் அவ்வாறான மனைப்பிரிவுக்கு அல்லது அதில் அமையும் மனைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் வரன்முறை ஆணை ஏதும் வழங்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>இணைப்பு:</u>
பார்வை 1-ல் சுட்டிய அரசாணை நகல்.

(ஒம்/-) ராஜேஷ் லக்கானி
நகர் ஊரமைப்பு ஆணையர் (மு.கூ.பொ.)

<u>பெறுநர்:</u>

1. உறுப்பினர் செயலர் (பொ),
அனைத்து கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள்
மற்றும் புதுநகர் வளர்ச்சி குழுமங்கள்.

2. துணை இயக்குநர் / உதவி இயக்குநர்,
அனைத்து மண்டல அலுவலகங்கள்

3. தலைமை அலுவலகத்தின் அனைத்து துணை இயக்குநர் / உதவி இயக்குநர்,
துணை இயக்குநர் (நிர்வாகம்) (பொ),
கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/ 22/2/19

... துணை இயக்குநர்